

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சியில்

# 3132 குடும்பங்களுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்கள்: அமைச்சர் பி.வி.ரமணா வழங்கினார்

திருவள்ளூர், ஏப். 20–

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சியில் 4வது கட்டமாக வார்டு எண் 6ஐ சார்ந்தவர்களுக்கு அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் 661 குடும்பங்களுக்கும், வார்டு எண் 14 மற்றும் 16க்குட்பட்ட பயனாளிகளுக்கு ராதா கிருஷ்ணன் நடுநிலைப் பள்ளியில் 1006 குடும்பங்களுக்கும், வார்டு 12ஐ சார்ந்தவர்களுக்கு ராமா ராவ் திருமண மண்டபத்தில் 504 குடும்பங்களுக்கும், வார்டு 11ஐ சார்ந்தவர்களுக்கு ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் 615 குடும்பங்களுக்கும் வார்டு 13ஐ சார்ந்தவர்களுக்கு செங்குந்தநாதர் திருமண மண்டபத்தில் 346 குடும்பங்களுக்கும், ஆக மொத்தம் 3132 குடும்பங்களுக்கும் பால் வளத்துறை அமைச்சர் பி.வி. ரமணா, கலெக்டர் வீர ராகவ ராவ் தலைமையில் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்களை வழங்கினார்.

அமைச்சர் பி.வி.ரமணா விழாவில் பேசுகையில், தமிழ்நாட்டில் தாய்மார்களின் வீட்டு வேலைச் சுமையை குறைக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் தான் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கும் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 3 கட்டங்களாக வழங்கப்பட்டு தற்பொழுது நான்காவது கட்டமாக வழங்கப்பட்டு வருகிறது. 5வது கட்டமாக டிசம்பருக்குள் விலையில்லா அரிசி பெரும் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்படும். 2011 சட்டமன்ற பொது தேர்தலின் பொழுது கூறிய அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள், +2 வரை படித்த பெண்களுக்கு ரூ.25 ஆயிரம் திருமண உதவி தொகையும் தாலிக்கு 4 கிராம் தங்கம், பட்டம் மற்றும் பட்டய படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50 ஆயிரம் திருமண உதவி தொகையும் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோல பல அரசு நலத்திட்ட உதவிகள் இந்தியாவிலேயே வேறு எங்கும் இது போல் செயல்படுத்தப்படுவது இல்லை".

இவ்வாறு அமைச்சர் பி.வி.ரமணா கூறினார்.

கலெக்டர் வீர ராகவ ராவ் தலைமையுரையாற்றுகையில், தமிழக முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அம்மா திட்டத்தின் கீழ் லட்சக்கணக்கான மனுக்கள் பெறப்பட்டு, அரசின் துறை பணியாளர்கள் மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்று தீர்வு காணப்பட்டுள்ளது. விரைவு பட்டா வழங்கும் திட்டத்திலும் பல்லாயிரக்கணக்கானோர் பயன் பெற்றுள்ளனர் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில், அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் கோ.அரி, திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் மு . அ ரு ண் சு ப் பி ர ம ணி யன் , நகர்மன்றத் தலைவர் சவுந்தர்ராஜன், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் தக்கார் ஜெய்சங்கர், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் எஸ்.சேதுமாதவன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் ரவி (திருத்தணி), குணாளன் (திருவாலங்காடு), காஞ்சிபுரம் திருவள்ளூர் பால் கூட்டுறவு சங்கத் தலைவர் ஜே.சந்திரன், திருத்தணி நகர் மன்றத் துணைத் தலைவர் மாசிலாமணி, திருத்தணி வட்டாட்சியர் கணேசன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தொகுதியில்

# ஜெயலலிதா முதல்வராக வேண்டி அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு வழிபாடு– அன்னதானம்

## அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் ஏற்பாடு

புதுக்கோட்டை, ஏப். 20–

மக்களின் முதல்வர் அம்மாவின் நலம்காத்திடவேண்டியும், முதல்வராக வேண்டியும் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு வழிபாடு மற்றும் அன்னதானம் அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் ஒன்றியம், விராலிமலை ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் அந்தந்த ஊராட்சிகளில் உள்ள கோவில் மற்றும் தேவாலயங்களில் மக்களின் முதல்வர் ஜெயலலிதா மீண்டும் தமிழக முதல்வராக வேண்டியும், அவரின் நலம் காத்திட வேண்டியும் சிறப்பு வழிபாடுகள் புதுக்கோட்டை மாவட்ட செயலாளரும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மக்களின் முதல்வர் ஜெயலலிதாவுக்காக புதுக்கோட்டை மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்டம் முழுவதும் அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் நடைபெற்று வரும் இந்த சிறப்பு வழிபாடுகளில் அனைத்து ஒன்றியங்களிலும் கழக நிர்வாகிகள், அந்தந்த ஒன்றியங்களின் ஒன்றியச் செயலாளர்கள், அணிச்செயலாளர்கள் முன்னிலையிலும் அனைத்து சமுதாய பொதுமக்களும், கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் இணைந்து ஒவ்வொரு நாளும் கோவில்களில் சிறப்பு அபிஷேக ஆராதனை, பால்குடம், குத்துவிளக்கு பூஜை, படி பூஜை உள்ளிட்ட பல்வேறு வகையான சிறப்பு பிரார்த்தனைகள், கோ பூஜை, சிறப்பு யாகங்கள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல மக்களின் முதல்வர் ஜெயலலிதா மீண்டும் தமிழக முதல்வராகிட வேண்டியும், ஜெயலலிதாவின் நலம் காத்திட வேண்டியும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களில் இஸ்லாமிய தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பு தொழுகையும், சர்ச்சுகளில் சிறப்பு பிரார்த்தனை ஜெபக்கூட்டமும் நடத்தி ஜெயலலிதாவுக்காக மனமுருகி வழிபட்டு வருகின்றனர்.

இந்த சிறப்பு வழிபாட்டின் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் கழக நிர்வாகிகள் முன்னிலையில் அந்தந்த ஊராட்சிகளில் உள்ள கோவில் மற்றும் தேவாலயங்களில் சிறப்பு வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வழிபாட்டின் முடிவில் வழிபாடுகளில் கலந்துகொண்ட அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் நாள் முழுவதும் தொடர் அன்னதானம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் நடைபெறும் அன்னதானத்தில் சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள், கூட்டுறவுசங்க பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.





# புதிதாக 30 பி.எட். கல்லூரிகள் தொடங்க விண்ணப்பம்: கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேட்டி

சென்னை, ஏப். 20–

புதிதாக 30 பி.எட். கல்லூரிகள் தொடங்க அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளனர் என்று தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜி.விஸ்வநாதன் தெரிவித்தார்.

இது குறித்து ஜி.விஸ்வநாதன் நிருபர்களிடம் கூறியதாவது:–

தமிழ்நாட்டில் இந்த வருடம் வரை பி.எட். படிப்பு ஒருவருடமாக உள்ளது. அந்த படிப்பை 2 வருடங்களாக்க மத்திய அரசு அறிவித்தது. இதைத்தொடர்ந்து பி.எட். படிப்பை 2 வருடங்களாக்குவது குறித்து அதற்கான பாடத்திட்டம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் சார்பில் பல்வேறு பாடத்திட்ட நிபுணர்கள் கொண்ட குழு தயாரித்து வருகிறது. அதில் 75 சதவீத பணிகள் முடிந்துவிட்டன.

வருகிற கல்வி ஆண்டில் 1 வருட பி.எட். படிப்பா? 2 வருட பி.எட். படிப்பா? என்பதை இப்போது எதுவும் கூற இயலாது. காரணம் இது தொடர்பான வழக்கு ஐகோர்ட்டில் உள்ளது.

பி.எட். படிப்புக்கு தமிழ்நாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது. பி.எட். படித்தால் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளது.

இதன் காரணமாக புதிதாக 30 பி.எட். கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பங்கள் வந்துள்ளன.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் சார்பில் இன்று (20 ந்தேதி) முதல் 25ந்தேதி வரை சர்வதேச மாநாடு சென்னை புதுக்கல்லூரியில் நடைபெறுகிறது.

இவ்வாறு ஜி.விஸ்வநாதன் தெரிவித்தார்.

# ஜப்பானில் 6.8 ரிக்டர் அளவுகோலில் பயங்கர நிலநடுக்கம்–மக்கள் பீதி

## சுனாமி எச்சரிக்கை வாபஸ்

டோக்கியோ,ஏப்.20–

ஜப்பான் மற்றும் கிழக்கு தைவான் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் தெற்கு ஜப்பான் பகுதியில் உள்ள தீவுகளில் சுனாமி தாக்குதல் நிகழலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு பின்னர் அது வாபஸ் பெறப்பட்டது.

பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையமோ சுனாமிக்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்தது. ரிக்டர் அளவுகளில் 6.8 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் தைவான் தலைநகரான தைப்பேயில் உள்ள கட்டிடங்களில் அதிர்வுகள் ஏற்பட்டது. இதன் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் பற்றி இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

முக்கியமாக தைவான் அருகில் இருக்கும் தெற்கு ஒகினாவாவில் உள்ள தொடர் தீவுகளில் சிறிய அளவிலான சுனாமி தாக்கக்கூடும் என ஜப்பான் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளாது. ஆனால் சுனாமி எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள துறைமுக பகுதியில் கடல் மட்டத்தில் இதுவரை எந்த மாற்றமும் ஏற்படவில்லை என அந்நாட்டு தொலைக்காட்சிகள் செய்தி வெளியிட்டுள்ளன.

**சென்னை உயர்நீதிமன்றம்**
**(சாதாரண அசல் அதிகார வரம்பு)**
நிறும மனு எண் 137 ஆப் 2015-க்கு
தொடர்புடைய நிறும விண்ணப்ப எண் 566 ஆப் 2013-ஆம்
ஆண்டு நிறுமங்கள் சட்டம் தொடர்பானது மற்றும்
நிறுமங்கள் சட்டப்பிரிவுகள் 391 முதல் 394-ன்கீழ்
திருவாளர்கள் குட்எர்த் ஷிப்பில்டிங் பிரைவேட் லிமிடேட்-ஐ
திருவாளர்கள் ஐ.எல்.எப்.எஸ். தமிழ்நாடு பவர் கம்பெனி
லிமிடேட்-உடன்
இணைக்கும் திட்டம் குறித்து
அதன் சரியொப்பு பங்குதாரர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட
ஒருங்கிணைப்பு கூட்டு திட்டம் குறித்தானது

திருவாளர்கள் குட்எர்த் ஷிப்பில்டிங் பிரைவேட் லிமிடெட்,
B ப்ளாக்,, நவீன்ஸ் பிரிசிடியம், 4வது தளம்,
103, நெல்சன் மாணிக்கம் சாலை,
அமைந்தகரை, சென்னை 600029. ...மனுதாரர் நிறுவனம்
டிரான்ஸ்பெரர் கம்பெனி

**மனு பற்றிய அறிவிப்பு**

1956 ம் வருடததிய நிறுமங்கள் சட்டம் தொடர்பாக நிறும சட்டப் பிரிவுகள் 391 முதல் 394 வரை உள்ள பிரிவுகளின்கீழ் திருவாளர்கள் குட்எர்த் ஷிப்பில்டிங் பிரைவேட் லிமிடேட்டினை திருவாளர்கள் ஐ. எல். எப். எஸ். தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடேட்- உடன் இணைக்கும் திட்டம் குறித்து அதன் சரியொப்பு பங்குதாரர்கள் உடன் ஏற்படுத்திக் கொண்ட ஒருங்கிணைப்பு கூட்டு திட்டத்திற்கு அனுமதி கோரும் மனு, மனுதாரரால் 01.07.2013 அன்று தாக்கல் செய்யப்பட்டு பின்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறுமங்கள் நீதிபதி முன்பு 04.06.2015 அன்று விசாரணைக்கு வருகிறது. எந்த ஒரு நபரேனும் மேற்கண்ட மனுவை ஆதரித்தோ, அல்லது எதிர்த்தோ கருத்து தெரிவிக்க இருப்பின், அதை அறிவிப்பு மூலம், மனுதாரரின் வழக்கறிஞரான எமக்கு தாங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமோ கையொப்பமிட்டு பெயர் மற்றும் முகவரி குறிப்பிட்டு மனு மீதான விசாரணை நடக்கும் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன் எமக்கு வந்து சேரும் வகையில் அனுப்பவேண்டும். மனுவை எதிர்ப்பதாக இருப்பின் அதற்கான காரணங்களை அல்லது பிரமாணப் பத்திரத்தின் நகலை இந்த மனுவுடன் இணைத்து அனுப்பவேண்டும். மனுவின் நகல் எவருக்கேனும் வேண்டுமென்றால் அதற்கான கட்டணத்தை செலுத்தி கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திருவாளர்கள் மனோஜ் மேனன், கார்த்திக்,
முகுந்தன் மற்றும் நீலகண்டன்,
ஹாஜி மதார்ஷா & சன்ஸ் பில்டிங்ஸ்,
இரண்டாவது தளம்,
148, செகண்ட் லைன் பீச்,
சென்னை 600 001
மனுதாரரின் வழக்குரைஞர்கள்.

இடத்தில் : சென்னை
தேதி : 17.04.2015

**சென்னை உயர்நீதிமன்றம்**
**(சாதாரண அசல் அதிகார வரம்பு)**
நிறும மனு எண் 138 ஆப் 2015-க்கு
தொடர்புடைய நிறும விண்ணப்ப எண் 567 ஆப் 2013-ஆம்
ஆண்டு நிறுமங்கள் சட்டம் தொடர்பானது மற்றும்
நிறுமங்கள் சட்டப்பிரிவுகள் 391 முதல் 394-ன்கீழ்
திருவாளர்கள் குட்எர்த் ஷிப்பில்டிங் பிரைவேட் லிமிடேட்-ஐ
திருவாளர்கள் ஐ.எல்.எப்.எஸ். தமிழ்நாடு பவர் கம்பெனி
லிமிடேட்-உடன் இணைக்கும் திட்டம் குறித்து
அதன் சரியொப்பு பங்குதாரர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட
ஒருங்கிணைப்பு கூட்டு திட்டம் குறித்தானது

திருவாளர்கள் ஐ.எல்.எப்.எஸ். தமிழ்நாடு
பவர் கம்பெனி லிமிடேட், B ப்ளாக்,
நவீன்ஸ் பிரிசிடியம், 4வது தளம்,
103, நெல்சன் மாணிக்கம் சாலை,
அமைந்தகரை, சென்னை 600 029 ...மனுதாரர் நிறுவனம்
டிரான்ஸ்பெரி கம்பெனி

**மனு பற்றிய அறிவிப்பு**

1956 ம் வருடததிய நிறுமங்கள் சட்டம் தொடர்பாக நிறும சட்டப் பிரிவுகள் 391 முதல் 394 வரை உள்ள பிரிவுகளின்கீழ் திருவாளர்கள் குட்எர்த் ஷிப்பில்டிங் பிரைவேட் லிமிடேட்டினை திருவாளர்கள் ஐ. எல். எப். எஸ். தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடேட்- - உடன் இணைக்கும் திட்டம் குறித்து அதன் சரியொப்பு பங்குதாரர்கள் உடன் ஏற்படுத்திக் கொண்ட ஒருங்கிணைப்பு கூட்டு திட்டத்திற்கு அனுமதி கோரும் மனு, மனுதாரரால் 01.07.2013 அன்று தாக்கல் செய்யப்பட்டு பின்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறுமங்கள் நீதிபதி முன்பு 04.06.2015 அன்று விவாதத்திற்கு வருகிறது. எந்த ஒரு நபரேனும் மேற்கண்ட மனுவை ஆதரித்தோ, அல்லது எதிர்த்தோ கருத்து தெரிவிக்க இருப்பின், அதை அறிவிப்பு மூலம், மனுதாரரின் வழக்கறிஞரான எமக்கு தாங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமோ கையொப்பமிட்டு பெயர் மற்றும் முகவரி குறிப்பிட்டு மனு மீதான விசாரணை நடக்கும் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன் எமக்கு வந்து சேரும் வகையில் அனுப்பவேண்டும். மனுவை எதிர்ப்பதாக இருப்பின் அதற்கான காரணங்களை அல்லது பிரமாணப் பத்திரத்தின் நகலை இந்த மனுவுடன் இணைத்து அனுப்பவேண்டும். மனுவின் நகல் எவருக்கேனும் வேண்டுமென்றால் அதற்கான கட்டணத்தை செலுத்தி கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திருவாளர்கள் மனோஜ் மேனன், கார்த்திக்,
முகுந்தன் மற்றும் நீலகண்டன்,
ஹாஜி மதார்ஷா & சன்ஸ் பில்டிங்ஸ்,
இரண்டாவது தளம்,
148, செகண்ட் லைன் பீச்,
சென்னை 600 001
மனுதாரரின் வழக்குரைஞர்கள்.

இடத்தில் : சென்னை
தேதி : 17.04.2015

**MCX**
**METAL & ENERGY**
**Trade with Trust**
**Multi Commodity Exchange of India Limited**
Exchange Square, CTS No. 255, Suren Road, Chakala, Andheri (East), Mumbai – 400 093.
CIN: L51909MH2002PLC135594, E-mail: info@mcxindia.com, www.mcxindia.com

**NOTICE**

NOTICE is hereby given that the following Member of Multi Commodity Exchange of India Limited is hereby informed to remain present on April 22, 2015 at 11:30 am for personal hearing before the Membership Admission Committee at the address mentioned above regarding cancellation of Membership of the Exchange:

| Sr. No. | Members Name |
| --- | --- |
| 1. | M/s. Hema Ramesh |

If the aforesaid Member do not avail this opportunity to present matter along with the documentary evidence(s), if any, before the Membership Admission Committee it will be presumed that the Member has no explanation to offer and the Exchange shall cancel the membership and forfeit the amount remitted to the Exchange under Rule 23(b) of Rules of the Exchange without making any further reference in this regard.

***For Multi Commodity Exchange of India Ltd.***
***Sd/-***
*Sr. Vice President – Membership & Member Compliance*

*Place: Mumbai,*
*Date: April 17, 2015*

**ஏல விற்பனை**

அடகு வைக்கப்பட்டு மீட்கப் படாத தங்க நகைகள் 'The Kilpauk Benefit Saswatha Nidhi Ltd' No.82, New Avadi Road, Kilpauk, Chennai–10–ல் 24.04.2015 காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். M/s. **பாலாஜி & கோ**, சென்னை–600 001, **போன்:** 25345858

**வீடு, மனை ஏல விற்பனை**

சென்னை–12, புளியந்தோப்பு, குருசாமி நகர், 5வது தெரு, நெ.13, (B.R.Venugopal மற்றும் பலருக்கு சொந்தமான) வீடும் மனையும் அதே இடத்திலேயே 25.04.2015 மாலை 4.00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். M/s. **பாலாஜி & கோ**, சென்னை–600 001, **போன்:** 25345858

**வீடு, மனை ஏல விற்பனை**

சென்னை–12, புளியந்தோப்பு, குருசாமி நகர், 4வது தெரு, நெ.13, (N.K.Sigamaniமற்றும் பலருக்கு சொந்தமான) வீடும் மனையும் அதே இடத்திலேயே 25.04.2015 மாலை 3.00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். M/s. **பாலாஜி & கோ**, சென்னை–600 001, **போன்:** 25345858

**PASSPORT LOST**

This is to inform to the general public that I have lost my passport bearing No. B5872699 issued on 28.08.2001 by RPO/ Chennai at Chennai High Court Campus. Finder/s is/ are requested to hand over the same to me at the below mentioned address: No.17, 3rd Cross, K.K.Nagar, Karaikal-609 602. Finders will be rewarded suitably.

**K.Parameswaran**

EIH **அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**
The Oberoi Group உறுப்பினர்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம்,
சென்னை–600027.
வெப்சைட்: www.eihassociatedhotels.in
CIN: L92490TN1983PLC009903

**உறுப்பினர்களுக்கு அறிவிப்பு**

தற்போதுள்ள மெமோரண்டம் மற்றும் ஆர்டிகிள்ஸ் ஆசோசியேஷனுக்கு பதிலாக புதிய தொகுப்பிலான மெமோரண்டம் மற்றும் ஆர்டிகிள்ஸ் ஆசோசியேஷனுக்கு சிறப்பு தீர்மானமும் மூலமும், கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 110 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 22ன்படி திருமதி. ராதிகா விஜய் ஹரிபக்தி அவர்களை தொடர்ந்து 5 வருட காலத்திற்கு சுயேச்சை இயக்குனராக நியமனம் செய்வதற்கு சாதாரண தீர்மானம் மூலம் நிறைவேற்ற பங்குதாரர்களின் ஒப்புதலை பெற தபால் ஓட்டு அறிவிப்பு தபால் ஓட்டு படிவம் மற்றும் சுயமுகவரியிட்ட வர்த்தக பதிலுரை ஆகியவற்றை அனுப்பும் பணியை கம்பெனி முடித்துள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 22ன்படி, தபால் ஓட்டு மூலம் செயல்படுத்தப்பட்ட உள்ள அலுவல் மின்னணு மூலமாக வாக்களிப்பதை உள்ளடக்கி இருக்கும். மின்னணு வாக்குப்பதிவிற்காக, நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரிஸ் லிமிடெட்(NSDL)டின் சேவைகளை கம்பெனி பெற்றுள்ளது. மின்னணு முறையில் ஆவணங்களை பெற இமெயில் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு தபால் ஓட்டு அறிவிப்பு போன்றவை NDSL மூலமாக இமெயில் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. தபால் ஓட்டு படிவத்தை பெறாத உறுப்பினர்கள் கம்பெனிக்கு விண்ணப்பித்து மாற்று படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

தபால் ஓட்டுப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு (NDSL வெப்சைட் www.evoting.nsdl.comல்) திங்கட்கிழமை, ஏப்ரல் 20 2015 அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி செவ்வாய்க்கிழமை, மே 19, 2015 அன்று மாலை 6.00 மணிக்கு முடிவடைகிறது.

தபால் ஓட்டுப்பதிவு நேர்மையாகவும், நியாயமாக நடைபெறவும் முடிவுகளை துல்லியாக அறியவும் திரு. ஆசிம் குமார் சட்டோபாத்யாயா, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் அவர்களை கம்பெனி ஆராய்வாளராக நியமனம் செய்துள்ளது. தபால் ஓட்டு படிவங்களை முறையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு செவ்வாய்க்கிழமை, மே 19, 2015 அன்று மாலை 6.00 மணிக்குள் ஆராய்வாளரை சேரும்படி அனுப்ப வேண்டும். மே 19, 2015 அன்று மாலை 6.00 மணிக்கு பின்னர் பெறப்படும் தபால் ஓட்டு படிவங்கள் மற்றும் மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பெறப்படும் தபால் அல்லது மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாமல் அவை செல்லாதவையாக கருதப்படும்.

குறைகளை தீர்க்க அணுக வேண்டிய பொறுப்பான நபர் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

ஏ) **தபால் ஓட்டுப்பதிவு:**
திரு. சுமித் நாக்
இன்வெஸ்ட்டார்ஸ் சர்வீசஸ் டிவிஷன் (ISD)
EIH லிமிடெட்,
கார்ப்பரேட் அலுவலகம்: 7, ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054.
இமெயில்: isdho@oberoigroup.com
தொலைபேசி: 011 2389 0505; பேக்ஸ்: 011 2389 0605

பி) **மின்னணு வாக்குப்பதிவு:**
திரு. ராஜீவ்ரஞ்சன்
நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)
டிரேட் வேர்ல்ட் – A விங், கமலா மில்ஸ் காம்பவுண்ட்
லோயர் பரேல், மும்பை–400 013
இமெயில்: rajivr@nsdl.co.in
போன்: 022 2499 4738

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

இடம்: கொல்கத்தா
தேதி: 20 ஏப்ரல், 2015

**ஓரியண்டல் பேங்க் ஆப் காமர்ஸ்**
**(இந்திய அரசு நிறுவனம்)**
**ஓவர்சீஸ் கிளை**
**தாளமல் டவர்ஸ், 211, நரிமன் பாயிண்ட், மும்பை– 400 021.**
**தொலைபேசி எண்: (022) 4315 2933, 01 ★ பேக்ஸ் எண். (022) 2282 8149**
**★ இமெயில் ஐடி: bm0530@obc.co.in**

**(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002, பிரிவு 13 (2) ன் கீழ் கேட்புத் தொகை அறிவிப்பு)**

| | | |
| --- | --- | --- |
| 1. மெசர்ஸ் வினாயக் யூனிவர்சல் பிரைவேட் லிமிடெட் | :– | 306, சிவம் சேம்பர்ஸ் பிரமிசஸ், CHS லிமிடெட், 39A & 39B, S.V. ரோடு, கொரேகான் (டபிள்யூ), மும்பை–400 062. |
| 2. திரு. அபிஷேக் லோஹியா | :– | 903, அட்லாண்டா மேனர், மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, மாலட் (இ), மும்பை–400 097. |
| 3. திரு. டி. சம்பத் குமார் | :– | 149, V.R. பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி,சென்னை, தமிழ்நாடு–600 005. |
| 4. திரு. பரத் பூஷன் சிங் | :– | 306, சிவ்ராம் சேம்பர்ஸ், S.V.ரோடு, சஹாரா இந்தியா அருகில், கொரேகான்(டபிள்யூ), மும்பை–400104. |

அன்புடையீர்

உங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் நீங்கள் **ஓரியண்டல் பேங்க் ஆப் காமர்ஸ்**–க்கு **30.06.2014** அன்று வரை **ரூ.5,85,70,431.40/– (ரூபாய் ஐந்து கோடியே எண்பத்தைந்து லட்சத்து எழுபதாயிரத்து நானூற்றுமுப்பத்தொன்று மற்றும் நாற்பது பைசா மட்டும்)** மற்றும் எதிர்கால வட்டி ஆகியவற்றை செலுத்த வேண்டியது உள்ளது. நாங்கள் பல முறை கோரிக்கைகள் வைத்தும் நீங்கள் உங்கள் கணக்கில் உள்ள தொகையை செலுத்த தவறியதால், வங்கிக்கு பாக்கியை திரும்பச் செலுத்த நீங்கள் தவறியதன் அடிப்படையில் உங்கள் கணக்கு NPA கணக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து **60 நாட்களுக்குள்** நீங்கள் அனைவரும் பாக்கித் தொகையை செலுத்துமாறு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002, பிரிவு 13 (2) ன் கீழ் **08.07.2014 தேதியிட்ட** அறிவிப்பு பதிவுத்தபாலில் ஒப்புகை சீட்டுடன் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில், மேற்சொன்ன சட்டம், பிரிவு 13(4)ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளின்படி, வங்கி வசம் ஈடுபெற்ற ஆஸ்திகளாக உள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ளவற்றை எடுத்துக் கொள்வது உள்பட நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளும்.

1) **306, சிவம் சேம்பர்ஸ் பிரமிசஸ், CHS லிமிடெட், CTS No. 39A & 39B, S.V. ரோடு, சஹாரா இந்தியா அருகில், கொரேகான்(டபிள்யூ), மும்பை–400062ல் உள்ள அலுவலக வளாகம் மற்றும் கார்பெட் பகுதி 30 சதுர மீட்டர்கள். திரு. அபிஷேக் அசோக் லோடா அவர்களின் பெயரில் உள்ளது.**
2) **எல்/சி–ன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் பெறத்தக்க பொருட்கள்.**

**திரு. டி. சம்பத் குமார்** அவர்களுக்கு அனுப்பப்பட்ட **08.07.2014** தேதியிட்ட அறிவிப்புகள் பட்டுவாடா ஆகாமல் தபால் துறையினால் எங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டன. எனவே நாங்கள் இந்த அறிவிப்பினை வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டது. மேற்சொன்ன சட்டம், பிரிவு 13(2)ன் கீழ் இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் மேற்குறிப்பிட்டுள்ள தொகையை செலுத்த வேண்டும் என்று நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் மேற்சொன்ன சட்டம், பிரிவு 13(4)ன் கீழ் வங்கி நடவடிக்கை மேற்கொள்ளும். வங்கியின் எழுத்துபூர்வ அனுமதியின்றி ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்பனை செய்வது, குத்தகைக்கு விடுவது அல்லது இதர நடவடிக்கைகள் மூலம் **மாற்றும் நடவடிக்கைகளில் நீங்கள்** ஈடுபடக்கூடாது.

சட்ட விதிகளின் கீழ் அல்லது சட்ட நடைமுறைகளின் கீழ் பாக்கித் தொகையை திரும்பப் பெறுவதற்காக பாரபட்சமின்றி வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தேதி : 20.05.2015
இடம்: மும்பை

**அதிகாரபூர்வ அதிகாரி**
**ஓரியண்டல் பேங்க் ஆப் காமர்ஸ்**